සියලු ම හිමිකම් ඇවිරිණි
முழுப் பதிப்புரிமையுடையது
All Rights Reserved

බස්නාහිර පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
மேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Department of Education - Western Province

පළමු වාර ඇගයීම
முதலாம் தவணை மதிப்பீடு - 2018
First Term Evaluation

| | | | |
|---|---|---|---|
| ශ්‍රේණිය / தரம் / Grade: 10 | විෂයය / பாடம் / Subject: சைவநெறி | පත්‍රය / வினாத்தாள் / Paper: I | පැය / மணித்தியாலம் / Hours: 1 |

**கவனிக்கவும் :**

- எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
  1 தொடக்கம் 40 வரையான வினாக்களுக்குத் தரப்பட்டுள்ள நான்கு விடைகளில் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.
  உங்களுக்குத் தரப்பட்ட விடைத்தாளில் ஒவ்வொரு வினாக்களுக்குமுரிய சரியான விடையின் இலக்கத்தினுள் (×) புள்ளடி இடுக.

## பகுதி - I

1. சைவத்தை உள்நின்று உணர்த்தும் பொருளாய் அமைந்தவர்.
   i. குரு ii. சிவபொருமான் iii. முருகன் iv. சூரியன்

2. உயிர்கள் அனைத்திற்கும் தலைவராய் விளங்கும் இறைவனைச் சுட்டுவது
   i. நிர்மலன் ii. அனந்தன் iii. பிரஜாபதி iv. பசுபதி

3. உணர்வுகளை கடந்து மேலான உள்ளொளியாய் இறைவன் விளங்கும் நிலை
   i. சொரூபநிலை ii. அருவநிலை iii. அருவுருவநிலை iv. தடத்தநிலை

4. அழித்தல், அருளல் ஆகியவற்றைச் செய்யும் மூர்த்திகளாக விளங்குவோர்.
   i. பிரம்மா – விஷ்ணு ii. உருத்திரன் – மகேஸ்வரன்
   iii. உருத்திரன் – சதாசிவன் iv. மகேஸ்வரன் – சதாசிவன்

5. இறைவனை தந்தையாக கருதி வழிபடும் பாதம்
   i. சரியை ii. கிரியை iii. யோகம் iv. ஞானம்

6. இறைவனின் ஈடிணையற்ற மேன்மையை “தன்னை ஒப்பாய் ஒன்றுமில்லாத தலைமகன்” என்று பாடும் நூல்
   i. திருக்குறள் ii. சிவஞானபோதம் iii. திருமந்திரம் iv. திருவாசகம்

7. விரதங்களை மாத்திரம் உள்ளடக்கிய தொகுதி.
   i. பௌர்ணமி, சஷ்டி, ஆவணி திருவோணம் ii. அமாவசை, ஆடிப்பிறப்பு, துவாதசி
   iii. சிவராத்திரி, தைப்பொங்கல், தீபாவளி iv. நவராத்திரி, திருக்கார்த்திகை, திருவாதிரை

8. சைவசமயிகள் அனைவருக்கும் பொதுவான பூர்வக் கிரியையாக அமைவது
i. உபநயனச் சடங்கு
ii. ஏடு தொடங்குதல்
iii. வாஸ்த்து சாந்தி
iv. ஆசாரிய அபிடேகம்

9. ''நிலைபெறுமாறு எண்ணுதியேல் நெஞ்சே நீ வா'' என்று பாடியவர்.
i. திருஞானசம்பந்தர்
ii. சுந்தரமூர்த்திநாயனார்
iii. திருமூலர்
iv. திருநாவுக்கரசர்

10. சிறந்த விழுமியப் பண்புகளாக திகழ்பவை
i. கல்லாமை, தீண்டாமை
ii. அன்புடைமை, ஒழுக்கமுடைமை
iii. தேடாமை, பொய்யாமை
iv. அஞ்சாமை, பொய்யாமை

11. சைவ நாற்பாதங்களில் அடங்காதது.
i. யோகம்
ii. கிரியை
iii. ஞானம்
iv. தீட்சை

12. சமணர்களால் தருமசேனர் என்று அழைக்கப்பட்டவர்.
i. சுந்தரமூர்த்திநாயனார்
ii. மாணிக்கவாசகர்
iii. திருநாவுக்கரசர்
iv. மங்கையற்க்கரசியார்

13. திருமந்திரம் அடங்கும் திருமுறையாக அமைவது.
i. பத்து
ii. மூன்று
iii. நான்கு
iv. ஏழு

14. ஆன்மீக செயற்பாடுகள் அதிகளவில் இடம்பெறும் இடமாக விளங்குவது
i. வீடு
ii. பாடசாலை
iii. ஆரண்யம்
iv. ஆலயம்

15. அன்பே வடிவான கடவுளுக்கு பிரியமான செயலாக அமைவது
i. பலியிட்டு வணங்குதல்
ii. தீவிர விரதம் அனுடித்தல்
iii. ஜீவ காருண்யத்துடன் வாழல்
iv. ஆலய தரிசனம் செய்தல்

16. வாய்மையின் பொருட்டு பெறுவதற்கு அரிய செல்வங்கள் யாவற்றையும் இழந்தவர்
i. அரிச்சந்திரன்
ii. மகாத்மா காந்தி
iii. வள்ளலார்
iv. திருவள்ளுவர்

17. வாய்மையின் பிறப்பிடமாவது
i. அகந்தை
ii. மமதை
iii. அகத்துாய்மை
iv. ஆணவம்

18. பிரதமை முதல் பூரணை வரையுள்ள காலத்தைக் குறிப்பது
i. சுக்கிலபட்சம்
ii. உத்தராயணம்
iii. கிருஷ்ணபட்சம்
iv. அயனம்

19. முதலாவது பஞ்சாங்கம் கணிக்கப்பட்ட காலம்
i. சோழர் காலம்
ii. பல்லவர் காலம்
iii. குப்தர் காலம்
iv. மௌரியர் காலம்

20. இலங்கையில் பின்பற்றப்படாத பஞ்சாங்கமாக அமைவது.
i. சித்தாந்த பஞ்சாங்கம்
ii. வாக்கிய பஞ்சாங்கம்
iii. திருக்கணித பஞ்சாங்கம்
iv. வைபாடியம்

21. சமய வாழ்வில் உண்ணும் உணவை சுருக்குதல் அல்லது தவிர்த்தல் என்னும் பொருளைத் தருவது
i. உபவாசம்
ii. விரதம்
iii. நோன்பு
iv. பசி இருத்தல்

22. விநாயகருக்காக கார்த்திகை மாதத் தேய்பிறை பிரதமை முதல் மார்கழி மாத வளர்பிறைச் சஷ்டி வரையான இருப்பத்தொரு நாட்கள் அனுட்டிக்கப்படும் விரதம்
i. கந்தசஷ்டி ii. விநாயக சதுர்த்தி iii. விநாயக சஷ்டி iv. கணபதி விரதம்

23. முருகன் ஆலயங்களில் கந்தசஷ்டி விரதத்தின் நிறைவு நாளில் நடைபெறும் நிகழ்வு
i. சூரன் போர் ii. மான் வேட்டை iii. தாடகைவதம் iv. மாம்பழத்திருவிழா

24. சூரிய பகவானுக்கும், உஷாதேவிக்கும் மகனாக பிறந்தவர்.
i. ஆஞ்ச நேயர் ii. இராவணன் iii. சனிபகவான் iv. பிரகஸ்பதி

25. தீபாவளியின் மறுபெயராக அமைவது.
i. நரக சதுர்த்தி ii. ஏகாதசி iii. மகாநவமி iv. மதுர சங்ராந்தி

26. ஒரு இனத்தின் வாழ்வியல் சடங்குகளால் பிரதிபலிக்கப்படுபவை
i. பண்பாடு ii. நாகரீகம் iii. மனித நேயம் iv. விழுமியம்

27. பெறுமதிப்புமிக்க மனித நடத்தைகள் யாவும்.
i. மரபுகள் ii. விரதங்கள் iii. வழக்காறுகள் iv. விழுமியங்கள்

28. பிரமச்சரியத்தின் பின்வரும் நிலை
i. துறவறம் ii. இல்லறம் iii. வானபிரஸ்தம் iv. விருத்தாப்பியம்

29. பஞ்சகௌவியத்தை எமக்குத் தருவது
i. எருது ii. யானை iii. சிங்கம் iv. பசு

30. நவதானியத்தை பாலுடன் சேர்த்து மண் நிறைந்த சட்டியில் போடுதல்
i. அங்குரார்ப்பணம் ii. பூர்ணாகுதி iii. பாணிக்கிரகணம் iv. கிரியாமுறை

31. அறிவு என்னும் பொருளைத் தருவது.
i. ஆரணியம் ii. சங்கிதை iii. வேதம் iv. உபநிடதம்

32. சதுர் வேதங்களைத் தொகுத்தவர்
i. பரத்வாசகர் ii. வியாச முனிவர் iii. சனத் குமாரர் iv. சனாதனர்

33. காலத்தால் பிற்பட்ட வேதமாக அமைவது.
i. யசுர்வேதம் ii. சாம வேதம் iii. அதர்வ வேதம் iv. இருக்கு வேதம்

34. வேதங்களில் சமய சடங்குகளின் தத்துவ விளக்கத்தை கூறுவன.
i. ஆரணியங்கள் ii. உபநிடதங்கள் iii. பிராமணங்கள் iv. சங்கிதைகள்

35. 3000 ஆண்டுகளுக்கு மேலாக இந்துக்கள் தமது காலை வழிபாட்டில் ஓதும் மந்திரமான பஞ்சாட்சரம்
i. பிரணவ மந்திரம் ii. மகா மந்திரம் iii. காயத்திரி மந்திரம் iv. பஞ்சாட்சரம்

**36 – 40 வரையான வினாக்களுக்கு அட்டவணையை அவதானித்து விடை எழுதுக.**

| | | |
|---|---|---|
| A திருஞான சம்பந்தர் | G உத்தராயணம் | M ராகு காலம் |
| B ஆணவம் | H ஆடி அமாவாசை | N தட்சிணாயம் |
| C கன்மம் | I மாயை | O மகாளயம் |
| D சிவபெருமான் | J சித்திரா பௌர்ணமி | P பதி |
| E பிரம்மா | K திருநாவுக்கரசர் | Q பாசம் |
| F சுந்தரமூர்த்திநாயனார் | L விஷ்ணு | |

36. ஏழு திருமுறைகளையும் பாடியோரைக் குறிக்கும் தொகுதி எழுத்துக்களாக அமைபவை.
i. A,K,F ii. A,D,E iii. G,A,D iv. A,B,C

37. மகா சிவராத்திரியுடன் தொடர்புடைய தொகுதி எழுத்துக்களாக அமைபவை.
i. A,B,C ii. B,C,D iii. D,E,L iv. E,F,L

38. பிதிர் விரதங்களைக் குறிக்கும் தொகுதி எழுத்துக்களாக அமைபவை.
i. G,H,R ii. J,H,O iii. M,N,R iv. K,L,R

39. தேவர்களின் ஒரு நாளைக் குறிக்கும் தொகுதி எழுத்துக்களாக அமைபவை.
i. M, J ii. H,N iii. J,N iv. G,N

40. மும்மலங்களை குறிக்கும் தொகுதி எழுத்துக்களாக அமைபவை.

i. P,B,Q ii. B,C,I iii. D,P,Q iv. B,L,O

සියලු ම හිමිකම් ඇවිරිණි
முழுப் பதிப்புரிமையுடையது
All Rights Reserved

බස්නාහිර පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
மேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Department of Education - Western Province

පළමු වාර ඇගයීම
முதலாம் தவணைமதிப்பீடு - 2018
First Term Test Evaluation

| | | | |
|---|---|---|---|
| ශ්‍රේණිය / தரம் / Grade 10 | විෂයය / பாடம் / Subject: சைவநெறி | පත්‍රය / வினாத்தாள் / Paper II | පැය / மணித்தியாலம் / Hours 2 |

**முதலாம், இரண்டாம் வினாக்கள் உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. **சுருக்கமாக விடை எழுதுக.**

I. எமது நாட்டில் விளங்கும் பாடல் பெற்ற சிவாலயங்கள் யாவை?
II. சமயம் என்பதன் பொருள் யாது?
III. இறைவனின் மூவகை திருமேனிகளும் எவை?
IV. விருந்தோம்பலுடன் தொடர்புடைய அறங்கள் இரண்டினை எழுதுக.
V. பூர்வக்கிரியைகள் இரண்டினை குறிப்பிடுக.
VI. ஆலய வழிபாட்டை வலியுறுத்தும் ஆன்றோர் வாக்குகள் இரண்டினைத் தருக.
VII. அன்றாட வாழ்வில் இறைபக்தியுடன் நாம் மேற்கொள்ளும் கடமைகள் இரண்டினைக் கூறுக.
VIII. திதியின் வகைகள் யாவை?
IX. பாரணை என்றால் என்ன?
X. சனி தோசம் நீங்க நாம் தானமாக வழங்க வேண்டியவை யாவை?

**(2 x 10 = 20 புள்ளிகள்)**

2. **பின்வரும் தேவாரங்களில் இரண்டினை வரிக்கிரமமாக எழுதி, அவற்றின் பொழிப்புரைகளையும் எழுதுக.**

I. "அங்கமும் வேதமும்.........."
II. "உற்றுமை சேர்வது.........."
III. "குனித்த புருவமும்..........."
IV. "நாமார்க்கும் குடியல்லோம்......."
V. "அந்த ணாளனுன்.........."

**(2 x 05 = 10 புள்ளிகள்)**

3. **"சிவன் எனும் நாமம் தனக்கேயுடைய செம்மேனி யெம்மான்..................".**

**(அப்பர் சுவாமிகள்)**

I. இறைவனின் இரு நிலைகளும் யாவை?
II. சைவசமய நாற்பதங்களையும் அவற்றின் வழி நின்ற நாயன்மார்களையும் பெயரிடுக.
III. இறைவனின் எண்குணங்களையும் எழுதுக.

**(10 புள்ளிகள்)**

4. **“சைவ நெறியானது ஒழுங்குபடுத்தப்பட்ட ஒழுகலாறுகளையும் சமயம் சார்ந்த அறவாழ்க்கையாகப் போதிக்கின்றது”.**

i. சைவசமயம் வலியுறுத்தும் முக்கிய விழுமியங்கள் இரண்டினைத் தருக.

ii. “மக்கள் சேவையே மகேசன் சேவை” “ பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்” எனும் தொடர்களால் உணர்த்தபடுபவற்றை விளக்குக.

iii. அறப்பண்புகள் இரண்டினை உதாரணங்கள் மூலம் விளக்குக.

**(10 புள்ளிகள்)**

5. **“பண்டிகைகள் சமய வாழ்வையும், சமூக வாழ்வையும் வளப்படுத்தி சக வாழ்வை மேம்படுத்துகின்றன.”**

I. பண்டிகை என்பதன் வரைவிலக்கணம் யாது?.

II. தீபாவளி அன்று நாம் எவ்வாறு நீராட வேண்டும்? அவ்வாறு நீராடுவதன் நோக்கம் யாது?

III. தீபாவளியுடன் தொடர்புடைய கதையினை சுருக்கமாக எழுதுக.

**(10 புள்ளிகள்)**

6. **“வேதமொடு ஆகமம் மெய்யாம் இறைநூல்”**

I. உபநிடதங்கள் கூறும் விடயம் யாது?

II. வேதம் பொது நூல் எனவும், ஆகமம் சிறப்பு நூல் எனவும் வழங்கப்படுவது ஏன்?

III. சிவாகமங்கள் எவ்வாறு மனிதர்களுக்கு கிடைத்தது என்பதை விளக்குக.

**(10 புள்ளிகள்)**

7. **பின்வரும் தலைப்புகளில் இரண்டினைத் தெரிந்து சிறுகுறிப்பு எழுதுக.**

I. சிவபாத சுந்தரனார்

II. திருகோணச்சரம்

III. சித்தாந்தம் கூறும் பதி

IV. புரட்டாசி சனி விரதம்

**(5 x 2 = 10 புள்ளிகள்)**